சென்னை மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள், சென்னை – 08.

ந.க.எண். 5228/ஆ2/2022, நாள். 01.08.2022.

பொருள் : பள்ளிக் கல்வி – 2021 – 2022 ஆம் கல்வி ஆண்டில் தந்தை பெரியாரின் பிறந்த நாளையொட்டி அனைத்து பள்ளிகளில் பயிலும் மாணவர்களுக்கு "பெரியார் 1000 " வினா விடைப் போட்டித் தேர்வினை நடத்திட அனுமதி வழங்கப்பட்டது – சார்பு.

பார்வை 1 சென்னை – 06, பள்ளிக் கல்வி இணை இயக்குநர் (நாட்டு நலப் பணித்திட்டம்) அவர்களின் செயல்முறைகள் ந.க.எண்.036808/எம்/இ1/2022, நாள். 18.07.2022

2 தஞ்சாவூர் பெரியார் சிந்தனை உயராய்வு மைய இயக்குநர் அவர்களின் கடிதம் நாள். 16.05.2022

**********

மேற்காண் பொருள் சார்ந்து பார்வை 1– ல் காணும் சென்னை – 06, பள்ளிக் கல்வி இணை இயக்குநர் (நாட்டு நலப் பணித்திட்டம்) அவர்களின் செயல்முறைகளில் தந்தை பெரியாரின் பிறந்த நாளையொட்டி, தந்தை பெரியாரின் வாழ்க்கை வரலாற்றை பள்ளி மாணவர்கள் அறிந்து கொள்ளும் வகையிலும், மாணவர்களின் அறிவியல், சமூகவியல் சிந்தனைகளை வளர்க்கும் வகையிலும் திட்டமிட்டு பெரியார் மணியம்மை பல்கலைக்கழகத்தின், பெரியார் சிந்தனை மய்யத்தின் சார்பில் தமிழ்நாட்டில் மாநில அரசின் கட்டுப்பாட்டில் உள்ள அனைத்து பள்ளிகளில் 6 முதல் 12 ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவர்களுக்கு பெரியார் 1000 வினா விடைப் போட்டி எனும் போட்டித் தேர்வினை எதிர் வரும் 2022 ஆகஸ்ட் மாதம் 19,20 மற்றும் 21 ஆகிய தேதிகளில் ஒரு நாள் தேர்வு நடத்தப்பட்டு ஒவ்வொரு பள்ளிக்கும் 3 பரிசுகள் வழங்கப்படும் எனவும், தேர்வு நேரம் 45 நிமிடங்கள் எனவும், விடைத்தாள் coding sheet வடிவமைப்பில் இருக்கும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே, மேற்படி பெரியார் 1000 வினா – விடைப் போட்டி தேர்வினை பள்ளி இணைச் செயல்பாடுகளான வினாடி வினா மன்றத்தின் வாயிலாக அனைத்துப் பள்ளிகளிலும் மாணாக்கர்களின் பாதுகாப்பு மற்றும் நலன் பாதிக்காத வகையில் போட்டியினை நடத்திட பார்வை 1– ல் காணும் சென்னை–06, பள்ளிக் கல்வி இணை இயக்குநர் (நாட்டு நலப்பணித் திட்டம்) அவர்களால் அனுமதி வழங்கப்பட்டுள்ளது. மேலும், இவ்வினா விடை போட்டி சார்ந்து தஞ்சாவூர், பெரியார் மணியம்மை அறிவியல் மற்றும் தொழில்நுட்ப நிறுவனம் (நிகர்நிலைப் பல்கலை கழகம்) சார்பாக சென்னை மாவட்டத்திலுள்ள அனைத்துப் பள்ளிகளுக்கும் போட்டிக்கான வழிகாட்டு நெறிமுறைகள் மற்றும் வினா விடைக்கான புத்தகங்களை நேரில் வந்து வழங்குவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே, அனைத்துப் பள்ளித் தலைமை ஆசிரியர்களும் இப்போட்டிக்கான உரிய நடவடிக்கை மேற்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

ஒப்பம் XXXXXXXXX
முதன்மைக் கல்வி அலுவலர்
சென்னை – 08.

பெறுநர்
அனைத்துப் பள்ளித் தலைமை ஆசிரியர்கள், சென்னை மாவட்டம்.

நகல்

1. அனைத்து மாவட்டக் கல்வி அலுவலர்கள், சென்னை மாவட்டம், தகவலுக்காகவும் தக்க நடவடிக்கைக்காகவும் அனுப்பப்படுகிறது.
2. சென்னை–06, பள்ளிக் கல்வி இணை இயக்குநர் (நாட்டு நலப் பணித்திட்டம்) அவர்களுக்கு தகவலுக்காக பணிந்தனுப்பப்படுகிறது.
3. இயக்குநர், பெரியார் மணியம்மை அறிவியல் மற்றும் தொழில்நுட்ப நிறுவனம்(பெரியார் சிந்தனை உயராய்வு மய்யம்) தஞ்சாவூர், அவர்களுக்கு தகவலுக்காக பணிந்தனுப்பப்படுகிறது.